திகிண்/ரீ.பி. ஜாயா மகளிர் மகா வித்தியாலயம்

# முதலாந் தவணைக் கணிப்பீடு - 2020

## தமிழ் மொழியும் இலக்கியமும்

தரம் 07

சுட்டெண்:

நேரம் : 02 மணித்தியாலயம்

### பகுதி - I

**மிகப்பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. அந்தரே இளம் வயதிலேயே சமர்த்தியம் கொண்டவன்
(1) சுட்டித்தனம் (2) கெட்டித்தனம் (3) சோம்பேறி (4) தைரியம்

2. ஆயும் மலர்ப் பொழில் செய்து வந்தேன். இங்கு பொழில் என்பது
(1) தடாகம் (2) சோலை (3) குளம் (4) பாதை

3. ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன். இங்கு ஊறாத என்பதன் எதிர்ச் சொல்
(1) கிணறு (2) குளம் (3) காய்ந்த (4) உலர்ந்த

4. சுயநலம் என்பதும் ஒரு கடமையே ஆகும். இங்கு ''சுயநலம்'' என்பதன் எதிர்க் கருத்து
(1) பொது நலம் (2) தனியுரிமை (3) பிறர் நலம் (4) தனிநலம்

5. காண்டீபன் கோதண்டம் என்பதே தகுதி கோதண்டம் என்பது
(1) புருவம் (2) வயல் (3) பிறை (4) வில்

6. பெரிய மனிதன் வெள்ளைப் பந்தை வேகமாக எறிந்தான். இதில் வந்துள்ள எழுவாய் அடைமொழி
(1) வெள்ளை (2) மனிதன் (3) வேகமாக (4) பெரிய

7. ஐயோ! பாவம் இதில் பயன்படுத்தப்பட்ட நிறுத்தற்குறி
(1) மேற்கோட் குறி (2) வினாக்குறி (3) வியப்புக்குறி (4) காற்புள்ளி

8. பறவை என்பது பட்சி ஆயின் பரவை என்பது
(1) கடல் (2) வானம் (3) பரபரப்பு (4) குறுக்கம்

9. இளவரசன் நல்ல முறையில் ஆட்சி செய்தான். இதில் இளவரசன் என்பதன் எதிர்ப்பாற் சொல்
(1) இலவரசி (2) இளவரசி (3) இழவரசி (4) இளவறசி

10. பார்தெழுதல் என்பதைக் குறிக்கும் மற்றோர் சொற்றொடர்
(1) கேட்டெழுதல் (2) குறிப்பெழுதுதல் (3) பிரதி பண்ணல் (4) பிரதி கொடுத்தல்

11. அ, இ, எ, ஒ என்பது
(1) கிரந்த எழுத்துக்கள் (2) குறில் எழுத்துக்கள்
(3) நெடில் எழுத்துக்கள் (4) நெட்டெழுத்துக்கள்

12. புத்திசாலிகள் பரீட்சையில் சித்திடையவர். இதில் புத்திசாலிகள் என்பது
(1) ஆண்பால் (2) பெண்பால் (3) பலர்பால் (4) பலவின்பான்



kalvi.lk

13. அருமை, பெருமை, விருப்பு வெறுப்பு - இவை
   (1) இரட்டை மொழி (2) இணைமொழி
   (3) அடுக்குமொழி (4) அடுக்கிடுக்கு மொழி

14. அவன் கொழும்புக்குப் போகிறான். இத்தொடர் குறிப்பது
   (1) இறந்த காலம் (2) நிகழ்காலம்
   (3) எதிர்காலம் (4) மேற்கூறிய யாவும்

15. சுகந்தன் பச்சைக் கீரையை வேறோடு பிடுங்கினான். இதில் வரும் எழுவாய்
   (1) சுகந்தன் (2) பச்சை (3) கீரை (4) வேர்

16. "அந்தரே" எனும் கதையை எழுதியவர்
   (1) அழ. வள்ளியப்பா (2) எச்.எம். மொஹிதீன்
   (3) சோமசுந்தரம் புலவர் (4) அப்துல்லாப் புலவர்

17. மலையும் மலை சார்ந்த இடமும்
   (1) குறிஞ்சி (2) முல்லை (3) மருதம் (4) நெய்தல்

18. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
   (1) பொன்விழா (2) வைர விழா (3) அமுதவிழா (4) வெள்ளி விழா

19. ஜன்னல் - இதில் வரும் கிரந்த எழுத்து
   (1) ஜ (2) ன் (3) ன (4) ல்

20. படித்தான், எழுதினான் என்பன
   (1) பெயர்ச் சொல் (2) வினைச்சொல் (3) இடைச்சொல் (4) உரிச்சொல்



kalvi.lk

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.
    1. நீர் விரும்பிய பெரியார்
    2. நீர் விரும்பும் தொழில்
    3. உடைந்த குடையின் சுயசரிதை
    4. கடற்கரைக் காட்சி

02. உமது பாடசாலையில் நடபெற இருக்கும் கலைவிழாவிற்கு வருகை தருமாறு கூறி உமது நண்பனுக்கு 75 சொற்களில் கடிதம் எழுதுக.

03. பாட அலகை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

மாங்கனி தேங்கனி வாரி வந்தேன்
வாசமலர்களும் அள்ளி வந்தேன்
தீங்கரும் பாயிரம் தள்ளி வந்தேன் - மிகத்
தேனும் தினையும் சேர்த்து வந்தேன்.

அல்லும் பகலும் அலைந்து வந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா!

1. இப்பாடலை இயற்றியவர் யார்?
2. ஆறு எவற்றைக் கொண்டு வந்தது?
3. ஆறு எதனைக் காணச் செல்வதாகக் கூறுகிறது?
4. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள இணைமொழி யாது?
5. பின்வரும் சொற்களுக்கு பொருள் தருக.
    - i. கனி -
    - ii. ஆழி -
    - iii. தினை -
    - iv. அல்லும் பகலும் -
    - v. அலைந்து -



kalvi.lk

04. பாட அலகை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.

1. தன் தந்தையிடம் அந்தரே வினவியது யாது?
2. கடமை என்பது யாது?
3. காட்டு வளத்தையும் வன விலங்குகளையும் நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?
4. ஆரம்பத்தில் தட்டச்சு எந்த மொழியில் உருவாக்கப்பட்டது?
5. பின்வரும் பாடல் அடியை சந்திபிரித்து எழுதுக.

   i. கண்ணிரெண்டும் -

   ii. கணையென்றும் -

   iii. பெண்ணரசி -

   iv. பவளவிதழ் -

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.*

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp 075 287 1457